(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 131.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2011 ஒற்றோபர் 21, வெள்ளிக்கிழமை, பி. ப. 1.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0479/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் வகிபாகம் யாதென்பதையும்;

(ii) பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் விசாரிக்கப்பட்டு வரும் சட்ட விரோத கொடுக்கல் வாங்கல் விவகாரங்களின் எண்ணிக்கையையும்;

(iii) விசாரணை மேற்கொள்ளப்பட்ட வழக்குகள் மற்றும் அவற்றின் பெயர்கள் என்பவற்றையும்;

(iv) விசாரணைகளின் இற்றை வரையிலான பெறுபேறுகள் யாதென்பதையும்;

(v) வழக்குகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளனவா அல்லது அபராதம் விதிக்கப் பட்டுள்ளதா என்பதையும்;

(vi) விதிக்கப்பட்ட அபராதத் தொகைகளையும் ஒவ்வொரு வழக்கும் எப்போது தீர்த்து வைக்கப்பட்டது என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0956/ '10

2.

கௌரவ புத்திக பத்திரண,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலநோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை பிரதேச செயலகப் பிரிவின், மாத்தறை பம்புரண, சுமணசார மாவத்தை 35 B இலக்கத்தில் வசிக்கும் திருமதி சாந்தி பிரேமரத்ன சவூதி அராபியில் வேலை வாய்ப்புக்காக 2007.11.19 ஆம் திகதியன்று வெளிநாட்டுக்குச் சென்றுள்ளாரென்பதையும்;

(ii) தற்போது மூன்று வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள போதிலும், இவரைப் பற்றிய எவ்வித தகவலும் கிடைக்கவில்லை என்பதையும்;

(iii) இது சம்பந்தமாக இவரது கணவரான திரு. சுசில் பிரேமரத்ன மாத்தறையிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் முறைபாடு செய்துள்ள போதிலும் அதற்கு இற்றை வரை எவ்விதமான பதிலும் கிடைக்கவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா ?

(ஆ) (i) திருமதி சாந்தி பிரேமரத்ன பற்றி தேடிப் பார்த்து அவரை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன்?

0959/ '10

3\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் சட்டபூர்வமாக்கப்பட்டுள்ள உரிமம் பெற்ற கெசினோ விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அவை கொண்டு நடாத்தப்படும் இடங்கள் யாவை என்பதையும்,

(iii) அவற்றின் உரிமையாளர்களது பெயர் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்,

(iv) அவ்வாறான ஒவ்வொரு விடுதியும் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை கெசினோ விடுதிகளின் மூலம் அரசிற்குக் கிடைத்துள்ள வரி வருமானம் ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) கெசினோ விடுதியொன்றை ஆரம்பிப்பதற்கு உரிமத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய வழிமுறை யாது என்பதையும்,

(iii) உரிமம் வழங்கும் போது இறுதி அனுமதியளிக்கும் நபர் யாரென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2010 ஆம் ஆண்டில் கெசினோ விடுதிகளுக்கான புதிய உரிமப்பத்திரங் களுக்கென விண்ணப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்,

(ii) இவர்களில் உரிமப்பத்திரம் வழங்கப்படவுள்ளோரின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) அவ்வாறு உரிமப் பத்திரங்களைப் பெற்றவர்களின் பெயர்களும் முகவரிகளும் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1438/ '11

4\.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாதுகாப்பு அமைச்சின் கீழ் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1534/ '11

5.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) யாழ்ப்பாணம் - நல்லூர் பிரதேச செயலகத்தின் கீழுள்ள பூம்புகார் கிராமத்தின் தனியார் வீடொன்றில் தற்போது பாடசாலையொன்று நடாத்தப்பட்டு வருகின்றதென்பதை அறிவாரா?

(ஆ) 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ள இக் கிராமத்துக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் எதிர்கால கல்வி மேம்பாட்டினைக் கருத்திற்கொண்டு நிரந்தரப் பாடசாலைக் கட்டடமொன்றை அமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

1592/ '11

6.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை ரண்மினிதென்ன சினிமாக் கிராமத்தை நிர்மாணிக்க தாங்கியுள்ள மொத்தச் செலவினம் யாதென்பதையும்;

(ii) தற்போதைய அந்த கிராமத்தைப் பயன்படுத்தி நிறைவுசெய்யப்பட்டுள்ள படைப்புகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) கலைஞர்களின் படைப்புருவாக்கத்தின் பொருட்டு மேற்படி கிராமத்தை அவர்களுக்கு வழங்கும் போது பணம் அறவிடப்படுகிறதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், இன்றளவில் அதனூடாகச் சம்பாதித்துள்ள வருமானம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ரண்மினிதென்ன கிராமத்தின் பராமரிப்புப் பணிகளுக்காகவிருக்கும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அதன் நிருவாகம் மற்றும் பராமரிப்பிற்காக மாதாந்தம் ஏற்படும் செலவினம் யாதென்பதையும்;

(iii) மேற்படி கிராமத்தைப் பயன்படுத்தும்போது பொருளாதார நெருக்கடிகளைக் கொண்டுள்ள கலைஞர்களுக்கு வழங்கப்படும் விசேட சலுகைகள் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1614/ '11

7.

கௌரவ ஈ. சரவணபவன்,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அங்கு சேவையில் ஈடுபட்டுள்ள கிராம உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மீள்குடியேற்றம் இடம்பெறுகின்ற இப்பிரதேசங்களில் நிலவும் கிராம உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) யாழ்ப்பாண நிருவாக மாவட்டத்தின் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளில் நிலவும் கிராம உத்தியோகத்தர் வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது நிரந்தர கிராம உத்தியோகத்தர்கள் இல்லாத, பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்தில் பதில் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி பகுதியில் நிலவும் கிராம உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1094/ '11

8.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரின் மற்றும் அவரின் பிரத்தியேக ஆளணிக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி வாகனங்களில் ஒப்பந்த மற்றும் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) மேற்படி வாகனங்களின் பதிவு இலக்கம் மற்றும் வகை யாதென்பதையும்,

(iv) மேற்படி வாகனங்களுக்கு மாதாந்தம் செலுத்தப்படுகின்ற மொத்தப் பணத்தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அ(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வாகனத்தினதும் சாரதியின் பெயர், வயது, சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட திகதி ஆகியவை வெவ்வேறாக யாவையென்பதையும்,

(ii) இவர்கள் அரச சேவையிலிருந்து மேற்படி பதவிகளுக்கு இணைக்கப் பட்டுள்ளார்களாயின் எந்நிறுவனங்களிலிருந்து என்பதையும்,

(iii) ஒப்பந்த அடிப்படையில் புதிதாக சாரதிகள் ஆட்சேர்ப்புச் செய்யப் பட்டுள்ளார்களா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரின் பாதுகாப்புச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி வாகனங்களின் இலக்கம் மற்றும் வகை யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1197/ '11

9\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) கடந்த 5 வருடங்களுக்கான,

(i) முட்டையின் மொத்த மற்றும் தலாவீத நுகர்வையும்;

(ii) இலங்கையில் முட்டை உற்பத்திக்கான செலவையும்;

(iii) இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளின் தொகையையும்;

(iv) இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளின் பெறுமதியையும்;

(v) முட்டை இறக்குமதியாளர்களுக்கு உண்மையில் வழங்கப்பட்ட மாணியத்தையும்

வருடாந்த அடிப்படையில் அவர் அறிவிப்பாரா?

(ஆ) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் ஆகியவற்றுக்கு விதிக்கப்பட்ட சகல வரிகளையும் (நேரடி, மறைமுக) எவ்வளவு என்பதை வெவ்வேறாக அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1285/ '11

10\.

கௌரவ புத்திக்க பத்திரண,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை-கொழும்பு புகையிரதப் பாதையின் அபிவிருத்திப் பணிகளுக்காக எத்தனைக் கட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) அந்தக் கட்டங்களில் காலிக்கும் மாத்தறைக்கும் இடையிலான புகையிரத பாதை அபிவிருத்திக் கட்டத்தை தவிர ஏனைய கட்டங்களுக்காக வெவ்வேறாக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) அந்த நிதியை வழங்கும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனங்கள் எவை என்பதையும்;

(iv) வெளிநாட்டிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் கடன் தொகையாக இருப்பின் அதற்காக அறவிடப்படும் வட்டி வீதம் எவ்வளவு என்பதையும்;

(v) அந்தக் கடனைச் செலுத்தி முடிக்க வேண்டிய கால எல்லை என்ன என்பதையும்;

(vi) கடன்தொகை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் எவையென்பதையும்

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) புகையிரதப் பாதை அபிவிருத்தி செய்யப்பட்டதன் பின்னர் புகையிரத போக்குவரத்தில் ஏற்படும் வினைத்திறன் எத்தனை வீதத்தால் அதிகரிக்கும் என்பதை அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1439/ '11

11\.

கௌரவ அஜித் குமார,— கலாசார, கலை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலாசார, கலை அலுவல்கள் அமைச்சின் கீழ் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1096/ '11

12.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் மின்சார வசதியில்லாத வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) 2010 மஹிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தற்போது மின்சாரம் கிடைக்கப்பெறாத மண்ணெண்ணெய் பாவனையின் மூலம் ஒளியைப் பெற்றுக்கொள்கின்ற சகல குடும்பங்களுக்கும் மாதமொன்றுக்கு 5 லீட்டர் மண்ணெண்ணெய் வீதம் இலவசமாக வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தற்போது நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், குறைந்த வருமானம் பெறுகின்ற மக்களுக்கு இச்சலுகை பெற்றுக்கொடுக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மஹிந்த சிந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறைந்த வருமானம் பெறுபவர்களின் வீட்டு மின்சாரக் கட்டணப் பட்டியலில் 30% கழிவை வழங்குவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், இவர்களுக்கு இச்சலுகை வழங்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1286/ '11

13.

கௌரவ புத்திக பத்திரண,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தின் குறுவிட்ட வடக்கு எக்னெலிகொட சமூக நீர்வழங்கல் திட்டம் இற்றைக்கு 13 ஆண்டுகளுக்கு முன்னர் உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட ஒரு கருத்திட்டமாகும் என்பதையும்;

(ii) மேற்படி நீர் வழங்கல் கருத்திட்டத்தில் காணப்படும் வினைத்திறனின்மை காரணமாக அதன் மூலம் நீர்வசதியைப் பெறும் பிரதேச மக்கள் பாரிய குடிநீர்ப் பற்றாக்குறையால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தினூடாக தற்போது நீர் வழங்கலைப் பெறுகின்ற பாவனையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) புதிதாக நீர் வழங்கலைப் பெற விண்ணப்பித்துள்ள பாவனையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) வடக்கு எக்னெலிகொட சமூக நீர் வழங்கல் திட்டத்தை அரசாங்கம் பொறுப்பேற்று வினைத்திறனான வகையில் பிரதேச மக்களுக்கு குடிநீரை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் அதற்கு எடுக்கும் காலம் யாதென்பதையும்;

(iii) அதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1379/ '11

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எந்த அதிகாரபீடத்தின் கீழ் சட்டமா அதிபர் திணைக்களம் இயங்குகின்றது என்பதையும்;

(ii) சட்டமா அதிபர் திணைக்களத்திற்காக வருடாந்தம் மேற்கொள்ளப்படும் ஒதுக்கீடுகளையும்;

(iii) திணைக்களத்திலுள்ள பணியாள் தொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கையினையும்;

(iv) மேற்குறிப்பிடப்பட்டுள்ள பணியாள் தொகுதி உறுப்பினர்கள் பணியாற்றும் ஒவ்வொரு பிரிவு பற்றிய விபரங்களையும்;

(v) சட்டமா அதிபர் தொடங்கி அவருக்குக் கீழே வரும் மிகவும் சிரேஷ்ட அரச சட்டத்தரணிகள் 15 பேரின் பெயரினை மூப்புரிமையின் ஒழுங்கிலும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சட்டமா அதிபரை நியமிப்பதானது சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து மேற்கொள்ளப்படுகின்றதா அல்லது வெளியில் இருந்து மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) வெளியிலிருந்து மேற்கொள்ளப்படுவதாயின் தெரிவு நிபந்தனைகளையும்

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1440/ ’11

15.

கௌரவ அஜித் குமார,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் கீழ் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகளையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2011.04.07 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 7.00 மணிவரை இருக்குமாக. பி.ப. 2.30 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

நொத்தாரிசுகள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

ஆவணங்கள் பதிவு (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 6.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 7.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 10.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 11.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 12.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 13.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 14.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 15.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 16.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட துமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011),— “2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

19.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

20.

பலன புத்தர் சிலை அமைப்புச் சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21.

ஸ்ரீ தம்மாலங்கார சமூக சேவைகள் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

22.

இராமகிருஷ்ண சாரதா மிஷன் (இலங்கைக் கிளை) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

23.

தெஹிவளை நெதிமாலை பௌத்த கலாசார நிலையம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்) சட்டமூலம் — பரிசீலனை.

24.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரீசலனை.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**